# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## MCOP .No.108/2012 and MCOP 114/12

Deposition of RW2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in MCOP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 15.03.2024

Evidence Recorded Time: 12.25 P.M to 12.30 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **பாரதி** | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை:-**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை பார்க்கிறேன். சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்தது. அந்த அழைப்பாணையை இன்று கொண்டு வரவில்லை. என் பெயர் உள்ள ஆதார் அட்டையை இன்று சாட்சி சொல்லும் முன் தங்களிடம் காட்டுகிறேன். 431/2011 வழக்கு என் பெயரில் போடவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கை பற்றி எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் என் பெயரில் வழக்கு போடவில்லை என்றும் இருசக்கர வாகனத்தின் பெயரில் வழக்கு போடப்பட்டது என்றும் தெரிந்து கொண்டே நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. குற்றப்பத்திரிகை என் பெயரில் தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2, மேட்டுர் நீதிமன்றத்தில் என்மீது நடந்த குற்ற வழக்கில் நான் விடுதலை செய்யப்பட்டேன் என்று சொன்னால் சரிதான்.

4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –

இந்த விபத்து சம்மந்தமாக நான் இதுநாள் வரை எந்தபுகாரும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். என் அஜாக்கிரைதை மற்றும் கவனக்குறைவால் தான் விபத்து நடந்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேட்டுர் குற்றவியல் நீதித்துறை நடுவர் வழங்கிய விடுதலை தீர்ப்பை வைத்து இந்த வழக்கில் அதை காரணம் காட்டி நஷ்ட ஈடு வழங்குவதில் இருந்து தப்பிக்க முடியாது என்றால் தெரியாது.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

இந்த விபத்து சம்மந்தமாக மேச்சேரி காவல் நிலையத்தில் நான் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தபோது தவறாக போட்டுள்ளார்கள் என்று மேல் முறையீடு சென்றேனா என்றால்இல்லை. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான டிஎன் 52 எக்ஸ் 5897 என்ற 4 சக்கர மகேந்திரா மேக்ஸோ வாகனத்தினை ஓட்டி சென்றவர் நான் தான் என்றால் சரிதான். மேற்படி விபத்து நடந்த போது எனக்கு ஓட்டுநர் உரிமம் நடப்பில்இருந்தது என்றால் சரிதான். நான் ஓட்டிய வாகனத்திற்கு காப்பீடு மற்றும் பர்மிட் சரியாக இருந்தது என்று சொன்னால் சரிதான்.

ஓம்/– RW2

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.